மாலை முரசு

பக்கங்கள் 12

## இனி ஓ.எல். பரீட்சை பத்தாம் தரத்திலேயே

### கல்வி அமைச்சர் சுசில் அறிவிப்பு



கல்வி பொதுத்தராதர சாதாரணதர (ஓ.எல்) பரீட்சையை எதிர்காலத்தில் பத்தாம் 03 ▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 28 ஞாயிற்றுக்கிழமை 13.08.2023 அதிர்வு 13

# வன்முறையைத் தூண்டி ஆட்சியைக் கவிழ்க்க ஜே.வி.பி. சதி முயற்சி!

### ஜனாதிபதி ரணில் குற்றச்சாட்டு



நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தி, பொதும-க்களை வன்முறையாளர்களாக்கி, ஆட்சிக் கவிழ்ப்புச் சதியில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான ஒரு குழு ஈடுப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் பிரபல ஊடகம் ஒன்றும் இருக்கின்றது.

- இப்படி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குற்றச்சாட்டுத் தெரிவித்துள்ளார். 04 ▶



# 13இற்கு எதிராக தென்னிலங்கை ஒன்றிணையும்!

### சூளுரைக்கின்றார் கம்மன்பில்ல

கொழும்பு,ஓகஸ்ட் 13

13 பிளஸ் என்ற நோக்கத்துடன் செயற்பட்டமையால்தான் 2015 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் மஹிந்த ராஜபக்ஷவைப் புறக்கணித்தார்கள். ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்கால ஜனாதிபதி கனவுக்காக 13ஐ அமுல்படுத்த இடமளிக்க முடியாது. 13 இற்க்கு எதிராக தென்னிலங்கையில் எதிர்ப்பை ஒன்றிணைப்போம் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார். 04 ▶

# 13ஐ மேம்படுத்த இது நேரமல்ல!

### பொதுஜன பெரமுன முடிவு




கொழும்பு,ஓக.13

13 ஆவது திருத்தத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு இது உரிய தருணமல்ல என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகரகாரியவசம் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு இது பொருத்தமான தருணமிலலை என்ற நிலைப்பாட்டை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக சாகரகாரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் தெரியப்படுத்துவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக உள்ள பொதுஜன பெரமுனவின் பிரிவும் இந்த நிலைப்பாட்டை ஆதரித்துள்ளது.

பலவீனமான பொருளாதார நிலை காரணமாக அரசாங்கமே நெருக்கடியான நிலையில் உள்ள இந்தத் 03 ▶

# கைதடி நுணாவில் விபத்தில் யாழ். இந்து மாணவன் சாவு!






தென்மராட்சி சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏ- 9 பிரதான வீதியில் கைதடி நுணாவில் வைரவ கோவில் இடம் பெற்ற விபத்தில் பாடசாலை மாணவன் 03 ▶

# வடக்கு, கிழக்கு வாசிகளின் தலைகளை களனிக்குச் சுமந்து கொண்டு வருவேன்

### விகாரைகளில் கை வத்தால் அதுதான் கதி என்கிறார் மேர்வின்



நான் வடக்கு, கிழக்குக்கு வருவேன், நீங்கள் (வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள்) விகாரைகளை தடுக்க முற்பட்டால், மகா சங்கத்தினர் மீது கை வைக்க முயன்றால் நான் களனிக்கு சும்மா திரும்பி 04 ▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# நாவலடியில் முஸ்லிம்கள் வெளியேற்றத்துக்கு சாணக்கியனைச் சாடுகின்றார் ஹரீஸ் எம்.பி.!

## பசுத்தோல் போர்த்திய புலியின் சாயம் வெளுத்துள்ளதாம்





(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண, மட்டக்களப்பு மாவட்டத்தில் பூர்வீக முஸ்லிம் கிராமங்களையும், குடியுருப்புக்களையும் கொண்டு வாழும் முஸ்லிம்கள் அவர்களின் விகிதாரசத்திற்கு ஏற்ப மட்டக்களப்பு மாவட்டத்தில் காணிகள் இல்லாமல் வாழ்ந்து வருவது இந்த நாட்டிலுள்ள எல்லோருக்கும் நன்றாக தெரியும். மட்டக்களப்பு வாழ் முஸ்லிம்களின் சனத்தொகைக்கும் அவர்கள் வாழும் காணிகளின் அளவுக்கும் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் இருக்கிறது. காணி விடயத்தில் பாரிய சிக்கல்களை சந்தித்து வரும் ஒரு சமூகமாகவே மட்டக்களப்பு மாவட்டம் வாழ் முஸ்லிம்கள் வாழ்கின்றனர் .

– இப்படி நாவலடி காணி விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரிஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் நாவலடி காணி விவகாரம் தொடர்பிலான அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் ஊடக வெளியீடு ஒன்றை வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அந்த அறிக்கையில் மேலும் கூறியவை வருமாறு:–

நாவலடியில் அத்துமீறி அடாவடித்தனமான முறையில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் செயற்பட்டிருப்பது கண்டித்தக்கதாகும். இவ்வளவு நாளும் பசுத்தோல் போத்திய புலியாக முஸ்லிம்களின் அனுதாபி போன்ற தோரணையில் செயற்பட்ட ஒருவர் பகிரங்கமாகவே முஸ்லிம்களுக்கு துரோகம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். இதன்மூலம் அவரின் சாயம் வெளுத்துள்ளது. ஏழை, எளிய மக்களின் காணியுரிமையை இல்லாமல் செய்கின்ற இந்த அத்துமீறிய நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த காணி விவகாரம் தொடர்பில் அரச உயர்மட்டங்களுக்கு எடுத்துச் சென்று மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அவலநிலையை அவர்களுக்கு விளக்கித் தீர்வை கோரத் தயாராக உள்ளோம். எமது முஸ்லிம் கட்சி தலைவர்கள் தற்போது பேசு பொருளாக மாறியுள்ள 13 ம் திருத்தம் சம்பந்தமான விடயங்களில் நாவலடியில் சாணக்கியன் போன்றோர்கள் நடந்து கொள்ளும் விடயங்களை கவனத்தில் கொண்டு முஸ்லிங்களின் இருப்புக்கு நிலையானதும், ஆதரவானதுமான தூரநோக்கு சிந்தனை கொண்ட முடிவுகளை எடுக்க முன்வர வேண்டும். – என்று தெரிவித்துள்ளார்.

# சிறுமிகளுக்குப் பாலியல் தொந்தரவு அல்லைப்பிட்டியில் இளைஞர் கைது

யாழ். அல்லைப்பிட்டி பகுதியில் சிறுமிகளை பாலியல் தொந்தரவு மற்றும் வன்புனர்விற்கு உட்படுத்திய சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தேகநபர் அல்லைப்பிட்டி பகுதியை சேர்ந்த 25 வயதான இளைஞர் எனப்

பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:–

அண்மையில் யாழ். வைத்திய சாலையில் அதிகளவு மாத்திரைகளை உற்கொண்டு தற்கொலைக்கு முயன்ற அல்லைப்பிட்டியினை சேர்ந்த 11 வயது சிறுமி காப்பாற்றப்பட்டார்.

இந்நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட உளவள சிகிச்சையின் பொழுது அல்லைப்பிட்டி வெண்புரவி நகர்ப் பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞர் தொடர்பில் சிறுமி தகவல் வெளியிட்டார்.

தான் உட்பட்ட ஐந்து சிறுமிகளுக்கு தொலைபேசி மூலம் தகாத குறுஞ் செய்திகளை அனுப்பிய நிலையில் அவர் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கியதன் காரணமாகவே தான் தற்கொலைக்கு முயன்றார் என அவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இதையடுத்து. வைத்தியசாலை மூலம் ஊர்காவற்றைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கபட்ட நிலையில் ஊர்காவற்றை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இதனையடுத்து அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டாவது சிறுமியை சட்ட வைத்திய அதிகாரி முன் பொலிஸார் முற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் அந்தச் சிறுமி வழங்கிய வாக்குமூலத்திற்கு அமைவாக பாலியல் தொந்தரவை மேற்கொண்ட 25 வயதுடைய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மற்றுமொரு சிறுமியும் இந்தச் சந்தேகநபரால் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகிய நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.







# சிங்களவரை ஜனாதிபதி ரணில் இரண்டாம் பட்சமாக்கியுள்ளார்!

## உதய கம்மன்பில கவலை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள், முஸ்லிம்கள் குறித்து கவனம் செலுத்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிங்களவர்களை இரண்டாம் பட்சமாக்கியுள்ளார் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இல்லாத பிரச்சினைகளைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார் எனவும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த புதிய சட்டத்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் எனவும் ஜனாதிபதி கூறுகிறார். 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்டு 13 பிளஸ் நடைமுறைப்படுத்தவும் ஜனாதிபதி முயற்சிக்கிறார்.

நடைமுறை அரசமைப்பின் ஒரு திருத்தமாகவே 13ஆவது திருத்தம் காணப்படுகிறது. ஆகவே புதிதாகச் சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏதும் கிடையாது.

விகிதாசார தேர்தல் முறைமையை இரத்து செய்வதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். விகிதாசார தேர்தல் முறைமையை இரத்து செய்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மையினத்தவர்களாக வாழும் சிங்களவர்கள் உள்ளூராட்சி மன்ற சபைகளுக்கான பிரதிநிதித்துவத்தில் பாதிக்கப்படுவார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள், முஸ்லிம்கள் குறித்து கவனம் செலுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்களவர்களை இரண்டாம் பட்சமாக்கியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

# மோ. சைக்கிளிலிருந்து விழுந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் அபுபக்கர் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

அதே பிரதேசத்தை சேர்ந்த கனகசபை பால்ராசா என்பவரே உயிரிழந்துள்ளார் என கூறப்படுகிறது.

இவர் கடந்த வியாழக்கிழமை இரவு வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும்போது கீழே விழுந்துள்ளார்.

அதனையடுத்து, அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே நேற்று சனிக்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் சந்தேகத்தை ஏற்படுத்தும் நிலையில், அவரது சடலம் மீதான மரண விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கைதடி நுணாவில்....

உயிரிழந்தான்.

இன்று முற்பகல் 11 மணியளவில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. மாட்டு வண்டி சவாரி போட்டிக்காக வண்டில் மற்றும் மாடுகளை ஏற்றிச்சென்ற கனரக லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் யாழ் இந்துக்கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் கண்டுவில் வீதி சாவகச்சேரியை சேர்ந்த 19 வயதான சிவபாலன் பிரவீண் என்ற மாணவனே விபத்து சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### இனி ஓ.எல்....

தரத்தில் நடத்துவது தொடர்பில் ஆராயப்படவுள்ளது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதனூடாக ஒரு வருடத்துக்கு முன்னதாகவே மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் நுழையும் வாய்ப்பை பெறவுள்ளனர் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தேசியக் கல்வி நிறுவகம் மற்றும் கல்வி தொடர்பான நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றின் ஊடாக இது குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

அதற்கமைய பத்தாம் தரத்தில் கல்வி பொதுத்தராதர பரீட்சையை நடத்துவதற்கு ஏதுவான வகையில் 6,7,8 மற்றும் 9 ஆம் தரத்துக்கான பாடத்திட்டங்களை ஒழுங்கமைப்பது குறித்து இந்த நிபுணர் குழுவின் ஊடாக அவதானம் செலுத்தப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

### 13 ஐ மேம்படுத்த

தருணத்தில் அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தை விஸ்தரிப்பதற்கு இணங்கினால் அரசாங்கம் தேவையற்ற அழுத்தத்திற்குள்ளாகலாம் என சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்

நாடு வலுவான பொருளாதார நிலையில் உள்ளவேளை 13 ஆவது திருத்தத்தை விஸ்தரிப்பது குறித்து சிந்திக்கலாம் என்ற யோசனையை முன்வைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வன்முறையை...

ஆளும் கட்சி கூட்டத்தில் இந்த விடயங்களை தெரிவித்த ஜனாதிபதி, அரச கவிழ்ப்புச் சதி தொடர்பான புலனாய்வு அறிக்கை மற்றும் வீடியோ ஆதாரங்கள் என்று கூறப்படும் சிலவற்றையும் வெளியிட்டார். மேலும் இந்தச் சதி திட்டம் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவை ஸ்தாபிக்கின்றார் எனவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

ஆளும் கட்சி கூட்டத்தில் மேலும் கருத்து தெரிவித்து ஜனாதிபதி அங்கு கூறியவை வருமாறு:-

நாட்டில் காணப்படும் வறட்சியை அடிப்படையாக கொண்டு குறிப்பிட்ட ஓர் அரசியல் கட்சியும் பிரபல ஊடகம் ஒன்றும் வன்முறைகள் ஊடாக ஆட்சி கவிழ்ப்பு சதியை முன்னெடுத்து வருகின்றன. கடந்த ஆண்டை போன்று மக்களை வன்முறையாளர்களாக்கி வீதியில் இறக்கி அரச எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வன்முறை போராட்டங்களின் இறுதி இலக்கு ஆட்சி கவிழ்ப்பு சதியாகும். இதனை மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான குழுவே முன்னெடுக்கின்றது. சதித்திட்டத்திற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. புலனாய்வு அறிக்கைகளும் உறுதிப்படுத்தியுள்ளன. இந்த வீடியோ ஆதாரங்களை அவதானியுங்கள். ஆதாரங்களை உள்ளடக்கிய அறிக்கையையும் பாருங்கள். மீண்டும் நாட்டை வன்முறைக்குள் கொண்டுச் செல்ல இடமளிக்க முடியாது.

எனவே ஜே.வி.பியின் ஆட்சி கவிழ்ப்பு சதி குறித்து கவனத்தில் கொள்ள விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவை எதிர்வரும் நாள்களில் நியமிக்க உள்ளேன். பாதுகாப்பு தரப்புகளுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கடுமையான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாடு தற்போது ஒரு சுமூகமான நிலை-லக்கு வந்துள்ளது. பொருளாதார மறுசீரமைப்புகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களின் முழுமையான ஒத்துழைப்பு பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு கிடைத்துள்ளது. பல்வேறு மக்கள் நலசார்ந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு, அனைத்து வழிகளிலும் நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்ல முயற்சிகளை முன்னெடுத்துள்ளேன்.

இவற்றை சீரழித்தும் நாட்டின் அமைதியை சீர்குலைக்கவுமே முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வறட்சியை காரணம் காட்டி மக்களை வன்முறைக்குள் தள்ளுவதற்கு இடமளிக்க முடியாது. விவசாயத்திற்கு தேவையான நீரை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விவசாய நடவடிக்கைகளுக்கு எனக் கூறி சமனல குளத்திலிருந்து ஒரு மாதத்திற்கு முன்பதாகவே தண்ணீர் விடுவிக்கப்பட்டுள்ளது. இது திட்டமிட்டதொரு செயல்பாடாகும்.

எனவே சமனல குளத்திலிருந்து நேரத்துடன் தண்ணீரை விடுவித்தமை குறித்து முழுமையான அறிக்கையை கோரியுள்ளேன். யார், எந்த நோக்கத்திற்கு இதனைச் செய்தார்கள் என்பதைக் கண்டறிய முழுமையாக விசாரணைகளை முன்னெடுக்கவும் உத்தரவிட்டுள்ளேன். அநாவசியமான காலப்பகுதியில் சமனல குளத்தின் நீர் விடுவிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரிகள் ஏற்கனவே முறையிட்டுள்ளனர்.

உடவலவ நீர்தேக்கத்தில் தண்ணீர்ப் பிரச்சினை ஏற்படாததொரு தருணத்தில் சமனல குளத்திலிருந்து எவ்வாறு நீரை விடுவிக்க முடியும்? இது குறித்த தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதே போன்று உடவலவ நீர்தேக்கத்தினால் பயனடைகின்ற 25 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலத்தில், 13 ஆயிரம் ஏக்கர் நெல் செய்கைக்கும் ஏனைய 12 ஆயிரம் ஏக்கர் ஏனைய பயிர் செய்கைக்குமே ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில், 25 ஆயிரம் ஏக்கரிலும் நெல் பயிரிட்டமையானது, யாருடைய ஆலோசனைகளின் பேரில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்ற பிரச்சினையும் அங்குள்ளது.

இந்த விடயம் குறித்தும் தனித்து விசாரணைகளைமுன்னெடுத்துஅறிக்கை சமர்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

- என்றார் ஜனாதிபதி.

---

### வடக்கு, கிழக்கு....

வரமாட்டேன், உங்களின் (வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள்) தலைகளை கையில் சுமந்து கொண்டுதான் களனிக்கு வருவேன்."

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இன்று முற்பகல் 11.55 மணிக்கு 'ஹிரு' தொலைக்காட்சியில் ஒளிபரப்பான மதிய நேர செய்தியில் மேர்வினின் இந்த உரை இடம்பெற்றிருந்தது.

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டுமெனில் இந்நாட்டில் உள்ள கள்வர்களை பிடிக்க வேண்டும், திருடர்கள், கமிஷன் காரர்களை விரட்ட வேண்டும்." எனவும் மேர்வின் வலியுறுத்தினார்.

"நாட்டில் மின்சாரம் இல்லை. விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நீர் கட்டணம் அதிகரித்துள்ளது. நிலைமை இப்படி இருக்க நுவரெலியாவில் ராஜபக்ஷ குடும்பம் கிரிக்கெட் விளையாடுகின்றது. இது விளையாடக்கூடிய நேரமா?"-எனவும்மேர்வின்கேள்விஎழுப்பினார்.

இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகவே மேர்வின் சில்வா வலம் வருகின்றார். ஊடக நிறுவனத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியமை, அரச ஊழியரை மரத்தில் கட்டிவைத்து தாக்கியமை, முன்னேஸ்வரம் ஆலயத்துக்குள் புகுந்து வேள்வி பூஜையை தடுத்து நிறுத்தியமை என அவரின் அடாவடி செயற்பாடுகளை பட்டியலிடலாம்.

ராஜபக்ஷக்களின் சகாவாக அவர்களின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த மேர்வின் சில்வாவை, 2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர் பொதுத்தேர்தலில் போட்டியிட எந்தவொரு கட்சியும் இடமளிக்கவில்லை. இதனால் அரசியல் ரீதியில் ஓரங்கட்டப்பட்டார். பின்னர் தனது மகனுடன் இணைந்து மக்கள் சேவை எனும் கட்சியையும் ஆரம்பித்தார். ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். பொதுத் தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் களமிறங்கினார். அதன்பின்னர் சுதந்திரக்கட்சி பக்கம் தாவினார். தற்போது எந்த கட்சி எனத் தெளிவில்லை.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை அம்மையார் இலங்கை வந்திருந்தபோது, அவருக்கு திருமண அழைப்பு விடுத்து நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தியவர்தான் இந்த மேர்வின் சில்வா. இறுதியில் அது மேர்வினின் தனிப்பட்ட கருத்து எனக்கூறி மஹிந்த அரசு அப்போது மன்னிப்பு கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

---

### 13இற்கு எதிராக...

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இல்லாத பிரச்சினைகளை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த புதிய சட்டத்திருத்தங்களை கொண்டு வர வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

நடைமுறை அரசமைப்பின் ஒரு திருத்தமாகவே 13 ஆவது திருத்தம் காணப்படுகிறது. ஆகவே புதிதாக சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏதும் கிடையாது. 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்டு 13 பிளஸ் அமுல்படுத்த ஜனாதிபதி முயற்சிக்கிறார்.

13 பிளஸ் என்ற நோக்கத்துடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்பட்டதால் நாட்டு மக்கள் அவரை 2015 ஆம் ஆண்டு புறக்கணித்தார்கள்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் 13 அமுல்படுத்த ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றிப்பெறாது. ஆகவே 13 ஆவதுதிருத்தத்துக்குஎதிரானதென்னிலங்கையின் எதிர்ப்பை ஒன்றிணைப்போம்.

- என்றார்.

(கம்மன்பில்லவின் இதே ஊடகவியலாளர் சந்திப்புத் தொடர்பான மற்றொரு செய்தி 03ஆம் பக்கத்தில்)

# 33 வருடங்களுக்கு முன்னர் ஆலயத்தினுள் குரூரமாக இடம்பெற்ற வீரமுனைப் படுகொலைக்கு நீதியும் நிவாரணமும் கிட்ட வேண்டும்!

## நினைவேந்தலில் ஜெயசிறில் கோரிக்கை





(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த 33 வருடங்களுக்கு முன்பு ஏதுமறியாத நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் ஆலயத்தினுள் வைத்து வெட்டியும் கொத்தியும் கொடூரமாக, குரூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள். இதுவரை அப்படு கொலைக்கு நீதியான விசாரணையோ எந்த நிவாரணமோ கிடைக்கவில்லை.

– இவ்வாறு வீரமுனைப் படுகொலையின் 33ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் (12) சனிக்கிழமை இடம் பெற்ற போது அதில் கலந்து கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேசத் தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கோரிக்கை விடுத்தார்.

வீரமுனை படுகொலையின் 33வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினமம் வீரமுனை ஆலய நிருவாகத்தின் ஏற்பாட்டில் வீரமுனை படுகொலை நினைவுத் தூபி முன்றிலில் இடம்பெற்றது. முதலில் அஞ்சலி இடம்பெற்று பின்னர் ஆலய வளாகத்தில் பொது நினைவேந்தல் நடைபெற்றது.

அங்கு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மேலும் பேசுகையில் –

சம்மாந்துறை வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை, அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருஷ்ண மிசன் பாடசாலை வளவினுள்ளும் 1990 ஜூன் மாதம் முதல் ஜூலை மாதம் வரை தஞ்சம் புகுந்திருந்தனர்.

இக்காலகட்டத்தில், ஓகஸ்ட் 12ஆம் நாளன்று ஆலயத்தினுள் புகுந்த முஸ்லிம் ஊர்காவல்படைக் கும்பல் ஒன்று நானூறுக்கும் அதிகமான பொதுமக்களை சுட்டும் வெட்டியும் கொன்றனர்.

இவர்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட பல அப்பாவிப்பொதுமக்கள் அடங்குவர்.

இன்று 33 ஆண்டுகள் கடந்தும் கொலையாளிகள் எவரும் தண்டிக்கப்படவில்லை. நீதியும் நியாயமும் கிடைக்கவில்லை. அது கிடைக்க வேண்டும்.– என்றார்.












# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விபத்து விபரீதம்

விபத்துகளினால் ஏற்படும் இழப்புக்களும் பாதிப்புகளும் நெஞ்சை உலுக்குகின்றன. மனதைப் பதற வைக்கின்றன . நெஞ்சத்தை நெருடச் செய்கின்றன.

எதிர்பாராத விதத்தில் - திடுதிப்பென - திடீரென - கண்ணிமைக்கும் நேரத்தில் - நடந்து முடிந்து விடுவதே விபத்து.

வெறும் கவனயீனம் மற்றும் நினையாப் பிரகாரத்தினால் நமது கட்டுப்பாடுகளை மீறி நடந்து விடுகின்ற விபத்துக்கள் தவிர்க்க முடியாதவைதான்.

ஆனால், வேண்டுமென்றே, திமிராய், பொறுப்பின்றி, விட்டேத்தியாக, அசிரத்தையாக, அசட்டையாக நடந்து, விபத்தை வினையாகத் தேடிக் கொள்ளுவது தவிர்க்கக் கூடியது. கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டியதும் கூட.

நாடு பெரும் பொருளாதாரச் சிக்கலில் மாட்டியுள்ளது. மருத்துவ சேவைகள், வைத்திய வசதிகள் மிகவும் குன்றியுள்ளன.

இந்தச் சமயத்தில் அநாவசியமான - தவிர்க்கப்படக்கூடிய - பெரும் எண்ணிக்கையான விபத்துகளும் அவற்றின் பெறுபேறான விளைவுகளும் பெருஞ்சுமையாக வந்து சமூகத்தின் மீது விழுந்துள்ளன.

இது குறித்து விரக்தியுடன் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டுகின்ற விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புக்கள் பெரும் மனித வலு இழப்புதான்.

தவிரவும் விபத்துகளினால் ஏற்படும் காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதில் ஏற்படும் மனித வலு, நிதி, நேர விரயங்கள் இன்னும் மோசமானவை.

எலும்பு முறிவால் வரும் விபத்துக் காயங்களுக்கு சிகிச்சை அளிக்க ஒருவருக்கு ஐந்து முதல் பத்து லட்சம் ரூபா வரை அரசு செலவிட வேண்டியுள்ளது என்று வைத்தியர் சத்தியமூர்த்தி சுட்டுகின்றார்.

மருந்துத் தட்டுப்பாடு, சுகாதார சேவைகள் நெருக்கடி, பொருளாதாரச் சிக்கல்கள் போன்றவற்றுக்கு மத்தியில் இத்தகைய விபத்துப் பாதிப்புகளை இயன்ற அளவில் தவிர்க்கச் செய்வதே நியாயமான நடவடிக்கையாக இருக்க முடியும்.

நமது பிரதேசங்களில் மோசமான விபத்துகளுக்கு இளைஞர்களின் ஹீரோயிஸக் கனவுச் சிந்தனைப் போக்கும் காரணம் என்று வைத்தியர் சத்தியமூர்த்தி விளக்குவதும் கவனிக்கப்பட வேண்டும்.

நம் கண் முன்னால் நடக்கும் உண்மை இது. இதைக் கட்டாயம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சமூக ஒன்றிப்பின் மூலமே - சமூகப் பொறுப்புணர்ந்து நடவடிக்கை எடுப்பதன் வாயிலாகவே - இத்தகைய ஹீரோயிஸ சிந்தனையால் எழும் அனர்த்தங்களைத் தடுக்க முடியும்.

கண்- மண் தெரியாமல், தேவையேயின்றி, அதிவேகமாக மோட்டார் சைக்கிள்களில் சவாரி செய்வது, பொறுப்பின்றி மோசமாக மோட்டார் சைக்கிள்களை செலுத்துவது, வீதிகளில் வேகமாக நெளிந்து, வளைந்து ஓட்டம் காட்டுவது, கூட்டமாக மோட்டார் சைக்கிள்களில் அட்டகாசம் செய்வது, வாகனங்களில் திமிர் ஓட்டம் காட்டுவது போன்ற அடாத்தான பண்புகளுக்கு எதிராக சமூகம் தன் பொறுப்புணர்ந்த நடவடிக்கைகளை ஒன்றுபட்டு வெளிப்படுத்த வேண்டும். சில சமயங்களில் பச்சை மட்டை அடி வரை தண்டனைகளும் கூடத் தேவைப் படலாம்.

தானாக திருந்தாத இளம் திமிரை தடியெடுத்துத்-தான் திருத்தியாக வேண்டும் என்றால் அதற்கும் பி-ன்னிற்கக் கூடாது.

# டில்லிக்கான தூதராக சேனுகா செனவிரட்ண




இந்தியாவிற்கான இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகராக சேனுகா செனவிரட்ண நியமிக்கப்படவுள்ளார்.

இலங்கையின் உயர்ஸ்தானிகராக தற்போது பணியாற்றும் மிலிந்தமொராகொட செப்டம்பரில் தனது பதவிப் பொறுப்பை முடித்துக்கொள்ளவுள்ள நிலையில் தற்போது ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றும் சேனுகா செனவிரட்ண உயர்ஸ்தானிகர் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

சேனுகா நியுயோர்க்கில் உள்ள ஐக்கியநாடுகள் அலுவலகத்தின் நிரந்தரவதிவிடப்பிரதிநிதியாகவும் பணியாற்றியிருந்தார்.

மேலும் ஐக்கிய இராச்சியம், தாய்லாந்து ஆகிய நாடுகளிற்கான தூதுவராகவும் இவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

# சூதாட்ட வரியை அதிகரிக்க விரைவில் புதிய சட்டமூலம்!



நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மறுசீரமைப்புகள் மையப்படுத்தி கசினோ சூதாட்ட வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான வரி அதிகரிப்பு சட்டமூலம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெளிவுப் படுத்தியுள்ளார்.

ஆளும் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கசினோ சூதாட்ட வரியை அதிகரிக்க சட்டமூலம் தொடர்பில் விளக்கமளித்துள்ளார்.

இந்தச் சட்டமூலம் இன்னும் முழுமையப்படுத்தப் படாத நிலையில் அமைச்சர்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுற்றுலாத்துறையை பாதிக்காத வகையில் இவ்வாறான வரி சட்ட மூலங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே கேட்டுக்கொண்டார்.






### திம்புள்ள - பத்தனை சந்தியில் நேற்றிரவு

# எரிபொருள் பௌசரும் காரும் நேருக்கு நேர் மோதி விபத்து!

### ஐந்து பேருக்குப் படுகாயம்

எரிபொருள் ஏற்றிச்சென்ற பௌசரும், காரொன்றும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த ஐவர் படுகாயமடைந்துள்ளனர் என்றுதிம்புள்ள – பத்தன பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் திம்புள்ள – பத்தனை சந்தியில் நேற்றிரவு 10 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

வெலிமடையிலிருந்து கொட்டகலை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் தேயிலை களஞ்சியசாலை வளாகத்துக்கு பயணித்துக்கொண்டிருந்த எரிபொருள் பௌசரும், நோர்வூட்டிலிருந்து தலவாக்கலை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த காருமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

கார் வேகமாக செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதன் சாரதி மதுபோதையில் இருந்துள்ளார் எனவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த ஐவரும் நோர்வூட் பகுதியைச் சேர்ந்த 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் என விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் திம்புள்ள – பத்தன பொலிஸார் தெரிவித்தனர்.





# செவித்திறன் குறைபாடு உள்ளோருக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க ஏற்பாடு



செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் இந்த வேலைத்திட்டம் நேற்று குருநாகலில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணத்தில் மாத்திரம் 77 ஆயிரம் செவித்திறன் குறைபாடுள்ளவர்கள் இருக்கின்றனர் எனத் தெரிவித்த அமைச்சர் பந்துல, அவர்களுக்கு கடந்த காலங்களில் சட்டப்பூர்வ சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஏனைய நாடுகளில் இவ்வாறான விசேட தேவையுடையவர்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படுவதாகவும் , இந்த நாடுகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட செயல்திறன்மிக்க பயிற்சியாளர்களை கொண்டு இந்த அனுமதி பத்திரம் வழங்கப்படுகிறது எனவும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.



# பல நாள் மீன்பிடிப் படகுகள் பலவும் நீண்ட தூரத் தொழிலை நிறுத்தின!

## எரிபொருள் விலையேற்றத்தின் பாதிப்பு

எரிபொருள் விலையேற்றம் காரணமாக 600 பல நாள் மீன்பிடிப் படகுகள் குறைந்த எரிபொருளைப் பயன்படுத்தி இலங்கைக்கு அருகில் உள்ள கடலில் மீன்பிடிக்கச் செல்கின்றன என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையைச் சுற்றி 23 மீன்பிடித் துறைமுகங்கள் உள்ளன. மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பல நாள் கப்பல்களின் எண்ணிக்கை 5500 ஆகும். அவற்றில் தொழில் செய்வோரில் சுமார் 1,600 பேர் வங்காள விரிகுடாவின் வடக்கு பகுதியில் அரபிக் கடலின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் பயணம் செய்கின்றனர்.

பல நாள் கடல் மீன்பிடிக் கப்பலுக்கு ஒரு பயணத்திற்கு 8 ஆயிரம் முதல் 12 ஆயிரம் லிட்டர் டீசல் தேவைப்படுகிறது. ஆனால் எரிபொருள் விலையேற்றம் காரணமாக தூரக் கடற்பரப்பில் மீன் பிடிக்க சென்ற மீன்பிடி படகுகள் தற்போது இலங்கை மற்றும் மாலைத் தீவுக்கு அருகில் உள்ள கடற்பரப்பில் மீன்பிடிக்கும் நிலைக்கு மாறியுள்ளன. இந்த பகுதியில் மீன்பிடி படகுகள் அதிகளவில் இருப்பதால் மீன் உற்பத்தியும் குறைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இலங்கையில் மீன்களின் விலை சந்தையில் வேகமாக அதிகரித்துள்ளது. 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 218 வீதமும், டீசல் லீற்றரின் விலை 279 வீதமும், ஒக்டேன் 92 பெற்றோல் லீற்றரின் விலை 103 வீதமும் அதிகரித்துள்ளது. இதனால் மீன்பிடி துறைமுகங்களில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பல நாள் மீன்பிடி படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கு அண்மித்த கடல் பரப்பில் அதிகளவான பல நாள் மீன்பிடிக் கப்பல்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையால், இலங்கையின் கடல் நீர்வாழ் சுற்றுச்சூழலில் ஈடுசெய்ய முடியாத மீன் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக கடற்றொழில் அமைச்சு அவதானித்துள்ளது.

மீனவர்கள் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் கடற்றொழில் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.



# கதிர்காமரின் வாழ்க்கையிலிருந்து கற்ற பாடங்கள் நமக்கு வழிகாட்டும்





## விதந்துரைக்கின்றார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஒகஸ்ட்13

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அமரர் லக்ஷ்மன் கதிர்காமரின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொண்ட பாடங்களை பிரதிபலிக்கும் இலங்கையை உருவாக்குவோம் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக் கொல்லப்பட்டு நேற்றுடன் 18 வருடங்களாகியுள்ளன. இந்தநிலையில் அன்னாரை நினைவுகூர்ந்து அமைச்சர் அலிசப்ரி ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், இந்தப் புனிதமான நாளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இரக்கமற்ற வன்முறையால் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்த ஒரு சிறந்த இராஜதந்திரி லக்ஷ்மன் கதிர்காமரின் நினைவை போற்றுகின்றோம்.

அனைத்து இலங்கையரினதும் பொதுவான நோக்கத்துக்கான லக்ஷ்மன் கதிர்காமரின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான அவரது அயராத முயற்சிகள் எமது தேசத்தின் வரலாற்றில் ஒரு அழியாத தடத்தை பதித்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

# திருமணம் செய்வார் என உறுதி கூறி சிறுமியைக் கூட்டிச் சென்றவர் கைது

## முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் சம்பவம்

திருமணம் செய்வதாகக் கூறி 15 வயதுச் சிறுமியை அழைத்துச் சென்ற இளைஞரை பொலிஸார் முல்லைத்தீவு – கள்ளப்பாட்டில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

விசுவமடுவைச் சேர்ந்த இந்தச் சிறுமியைக் காணவில்லை என கடந்த மாதம் சிறுமியின் பெற்றோரால் விசுவமடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனையடுத்து, நேற்று முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் வைத்து அந்த இடத்திச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில், சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு, மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.



கைதுசெய்யப்பட்ட இளைஞரைத் தடுப்புக் காவலில் வைத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த மாதம் இந்த இளைஞர் சிறுமியை திருமணம் செய்வார் என்ச்க் கூறி அழைத்துச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

# மட்டக்களப்பு கரடியனாற்றில் யானை தாக்கி மீனவர் மரணம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள மரப்பாலம் புத்தம்புரிகுளத்தில் மீன் பிடிக்க சென்ற மீனவர் ஒருவர் யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் இன்று ஞாயிறுக்கிழமை காலையில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மயிலவெட்டுவானை சேர்ந்த 42 வயதுடைய இராசமன்னன் தேவராசா என்பவரேஇவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த நபர் நேற்று சனிக்கிழமை இரவு களத்தில் மீன்படிக்க சென்றவர் காலையில் வீடுதிரும்பாத நிலையில் அவரை உறவினர்கள் தேடி சென்றபோது குளத்துக்கு அருகாமையில் யானைத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த நிலையில் சடமாக கிடப்பதை கண்டு பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

இதனையடுத்து சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர் .



# வயோதிபரைக் குத்திக் கொன்ற வயோதிபர் கத்தியுடன் கைது!

ஏத்கல காவல்துறை பிரிவிற் குட்பட்ட கொஸ்கொல்ல பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் கம்பளை – கொஸ்கொல்ல பிரதேசத்தை சேர்ந்த 71 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலையை செய்ததாக கூறப்படும் 69 வயதுடைய சந்தேக நபர் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கத்தியுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏத்கல காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாங்குநேரி சம்பவத்தால் தமிழகம் முழுவதும் அதிர்ச்சி!



நாங்குநேரியில் வீடு புகுந்து பாடசாலை மாணவரும், அவரது தங்கையும் வெட்டப்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஜாதி வன்மமும், ஆயுத கலாச்சாரமும் மாணவர்களிடம் தலை தூக்குவதை தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் நாங்கு நேரி பெருந்தெருவைச் சேர்ந்த கூலித்தொழிலாளி முனியாண்டி – அம்பிகாபதி தம்பதியரின் 17 வயது மகன் வள்ளியூர் அரசு பாடசாலையில் பிளஸ் 2 படிக்கிறார். அதே பாடசாலையில் படிக்கும் நாங்குநேரியைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த 9 ஆம் திகதி இரவில் முனியாண்டியின் வீட்டுக்குள் புகுந்து மாணவரையும், அவரது தங்கையையும் அரிவாளால் வெட்டினர். படுகாயமடைந்த இருவரும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்தை பார்த்த அவர்களது உறவினர் கிருஷ்ணன் அதிர்ச்சியில் உயிரிழந்துள்ளார்.

நாங்குநேரி பொலிஸார் வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட 5 பிரிவுகளில் வழக்குப் பதிந்து, பிளஸ் 2 மாணவர்கள் 4 பேர் மற்றும் 3 சிறார்களை கைது செய்துள்ளனர். அவர்கள் அனைவரும் திருநெல்வேலி கூர்நோக்கு இல்லத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை பருவத்திலேயே ஜாதி வன்மமும், ஆயுதங்களைக் கையாளும் குணமும்மாணவர்களிடையேதலைதூக்கி உள்ளதை ஆட்சியாளர்களும், அரசியல் கட்சியினரும் கண்டித்திருக்கின்றனர். அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் நேற்று வலியுறுத்தியுள்ளார்.

நாங்குநேரி சம்பவத்துக்கு சில நாட்களுக்கு முன்பாக வள்ளியூரில் பெட்ரோல் வெடிகுண்டு தயாரித்து, அதனை வெடிக்க வைத்து காணொளி வெளியிட்ட சிறுவர்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாளையங்கோட்டை அரசு உதவி பெறும் பாடசாலை ஒன்றில் வகுப்பறையில் செல்போனில் காணொளி பார்த்த மாணவர்களைக் கண்டித்த ஆசிரியர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். எந்த ஒரு செயலையும் ஜாதி, மதக் கண்ணோட்டத்துடன் அணுகும் போக்கு தமிழகத்தின் தென்மாவட்டங்களில் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டிடப்பட்டுள்ளது.

## ஜெயலலிதா மீது தாக்குதல் நடந்தது உண்மை: ஸ்டாலினுக்கு எடப்பாடி பழனிசாமி பதிலடி



கடந்த 1989 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் ஜெயலலிதா மீது தாக்குதல் நடத்தப்பட்டது உண்மை எனவும் அவையில் அன்று நான் இருந்தேன் என்றும் தமிழக சட்டப்பேரவை எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.


எதிர்க்கட்சித் தலைவர் என்றும் பாரா மல் ஜெயலலிதாவை அவமானப்படுத் தினார்கள் எனவும் அத்தனையும் கருணாநிதியின் முன்னிலையிலேயே இடம்பெற்றது என்றும் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது எடப்பாடி பழனிசாமி மேலும் தெரிவிக்கையில்,

1989 ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவையில் ஜெயலலிதா தாக்கப் பட்டது உண்மை. அவர் தி.மு.க. உறுப்பினர் களால் கீழே தள்ளிவிடப்பட்டார். உடனே இப்போது அமைச்சராக இருக்கும் நபர் ஒருவர் ஜெயலலிதாவின் சேலையை பிடித்து இழுத்தார். தற்போது காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் திருநாவுக்கரசரும், அமைச்சராக இருக்கும் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச் சந்திரனும் தடுத்து நிறுத்தினர்.

அவையில் அன்று நான் இருந்தேன். சம்பவத்தை நேரில் பார்த்ததன் அடிப்படையில் இதைக் கூறுகிறேன். ஒரு பெண் என்றும், எதிர்க்கட்சித் தலைவர் என்றும் பாராமல் ஜெயலலிதாவை அவமானப்படுத்தினர். அத்தனையும் கருணாநிதியின் முன்னிலையிலேயே நடந்தது. அப்படியொரு நிகழ்வு சட்ட மன்ற வரலாற்றில் நடந்தது இல்லை. சொல்லப்போனால் அது ஒரு கறுப்பு நாள். ஜெயலலிதாவுக்கு நடந்த அவமானத்தை முதல்வர் ஸ்டாலின் கொச்சைப்படுத்துகிறார். ஜெயலலிதாவின் சேலையையும், தலைமுடியையும் பிடித்து இழுத்தவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.

## செந்தில் பாலாஜியின் விளக்கமறியல் நீடிப்பு!



அமலாக்கத் துறையினரின் விசாரணை முடிந்து நேற்று நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிராக 120 பக்க குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது,

அத்துடன், அவரை வரும் 25 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் தடுத்துவைக்குமாறு நீதிபதி எஸ். அல்லி உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி சட்டவிரோதப் பணப் பரிவர்த்தனையில் ஈடுபட்டார் என குற்றம் சாட்டிய அம லாக்கத் துறை, கடந்த ஜூன் 14 ஆம் திகதி அவரைக் கைது செய்திருந்தது.

# ஹவாய் காட்டு தீ:

# உயிரிழப்பு எண்ணிக்கை 89 ஆக அதிகரிப்பு!



ஹவாய் காட்டு தீ காரணமாக மரணித்தவர்களின் எண்ணிக்கை 89 ஆக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இரண்டாயிரத்திற்கும் அதிகமான வீடுகள் முற்றாக அழிந்து போய் உள்ளதுடன் மேலும் அதிகமான கட்ட டங்கள் சேதமடைந்துள்ளன.

இது தவிர, ஆயிரத்திற்கும் அதிகமா னவர்கள் குறித்து எந்தவிதமான தகவல்களும் பெற முடியாமல் உள்ளதாக ஹவாய் ஆளுநர் ஜொஸ் கிறீன் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் உயிர்சேத எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என கவலை வெளியிடப்பட்டுள்ளது.

பேரழிவை ஏற்படுத்தியுள்ள காட்டுத் தீயால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிவதற்காக தடயவியல் நிபுணர் கள் மௌய் தீவிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

## சீனாவில் தொடரும் கடும் மழை: நிலச்சரிவில் சிக்கி 16 பேர் பலி!



சீனாவின் சியான் நகரில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 16 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியா கியுள்ளது.

அத்துடன், மேலும் பலர் காணாமல் போயுள்ளனர் என சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காணாமல் போனவர்களைக் கண்டறியும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

மோசமான வானிலை காரணமாக பல வீடுகள் மற்றும் கட்டிடங்கள் சேதம டைந்துள்ளன என்றும் சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## நைஜீரியாவில் பள்ளி வாசல் இடிந்ததில் 7 பேர் பலி!




நைஜீரியாவின் கட்டுன மாநிலத் திலுள்ள பள்ளிவாசலொன்றின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்தில் சிக்குண்டு உயிரிழந்தவர்களில் நால்வரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக் கின்றன.

அத்துடன், எஞ்சிய சடலங்களை மீட்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1980 ஆண்டு காலப்பகுதியில் கட்டப்பட்ட பள்ளிவாசலின் ஒரு பகுதியே இவ்வாறு இடிந்து விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளமை குறிப் பிடத்தக்கது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949